2021 மே 12] [*தற்காலிகப் பேரவைத் தலைவர்*]

பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும் அழைத்துவந்து, அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதி 8, உள்விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:*

நியமனம் செய்யப்பெற்றவர்	:	*திரு. கு. பிச்சாண்டி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)*
முன்மொழிந்தவர்	:	*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)*
வழிமொழிந்தவர்	:	*மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-05

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள்

[பேரவைத் தலைவர்] [2021 மே 12

மட்டுமே பெறப்பட்டுள்ளதால், மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துரைகள். முதலில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு மன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய பணிவான வணக்கம். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் இந்த மாமன்றத்தில் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதற்கு நல்ல சமிக்ஞையோடு நடந்துகொண்ட எதிர்க்கட்சிக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசனத்தில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். 1919–லிருந்து கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தச் சட்டமன்றம் நடந்து வருகிறது. முதலாவது இரட்டை ஆட்சி வந்தபொழுது சென்னை மாகாணத்திலும், பஞ்சாபிலும்தான் ஆட்சி அமையப்பெற்றது. அப்பொழுது எங்களது பாட்டன் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, பனகல்ராஜா அவர்கள் தலைமையில் ஆட்சி அமைத்தது. அதற்குப் பிறகு 100 ஆண்டு காலம் நடந்து வந்திருக்கிறது. நூறு ஆண்டு காலத்திற்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இச்சபைக்கு இன்றைக்கு நீங்கள் தலைவராக வந்திருக்கிறீர்கள். இந்த மன்றம் 1919 ஆம் ஆண்டு முதல் 1922 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பாங்கு